# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இந்தியாவில் கல்வி வளர்ச்சி முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) குருகுலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.

பதில் : **குருகுலத்தின் முக்கியத்துவம் :**
குருகுலங்களில் கற்பித்தல் வாய் வழியாகவே இருந்தது. கற்பிக்கப்பட்டவைகளை மாணவர்கள் நினைவிலும் ஆழ்சிந்தனையிலும் வைத்திருந்தனர்.
பல குருகுலங்கள் முனிவர்களின் பெயரர்லேயே அழைக்கப்பட்டன.
நூற்றுக்கணக்கான மாணவர்கள் காட்டில் அமைதியான சூழலில் அமைந்த குருகுலங்களில், ஒன்றாகத் தங்கி கற்றுக் கொண்டனர்.
குருவின் குடும்பமானது வீட்டுப்பள்ளி (அல்லது) ஆசிரமமாக செயல்பட்டது. தன்னைச் சுற்றி இருந்த மாணவர்களுக்கு குருவால் கல்வி வழங்கப்பட்டது. மாணவர்கள் குடும்ப உறுப்பினர் போல் வந்து தங்கி கல்வி பயின்றனர்.

2) பண்டைய இந்தியாவில் உருவான மிகவும் குறிப்பிடத்தக்க பல்கலைக்கழகங்களின் பெயர்களை எழுதுக.

பதில் : பண்டைய இந்தியாவில் உருவான புகழ்மிகு பல்கலைக் கழகங்கள் :
தட்சசீலம்
நாளந்தா வல்லபி
விக்கிரம சீலா
ஓடண்டாபுரி
ஜகத்தாலா

3) தட்சசீலம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

பதில் : **தட்சசீலம் :**
தட்சசீலம் பண்டைய இந்திய நகரமாக இருந்தது. தற்போது இது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது.
உலக பாரம்பரியத் தளமாக 1980 ல் யுனெஸ்கோ அறிவித்த இப்பகுதி ஒரு முக்கியமான தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதி.
சாணக்கியர் இப்பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து தனது அர்த்தசாஸ்திரத்தை தொகுத்தார்.
அலெக்சாண்டர் கன்னிங்காம் (தொல்பொருள் ஆராய்ச்சியாளர்) 19ம் நூற்றாண்டின் மத்தியில் பல்கலைக்கழக இடிபாடுகளை கண்டுபிடித்தார்.

4) சோழர் காலத்தில் தழைத்தோங்கிய கல்வி நிலையங்களைக் குறிப்பிடுக.

பதில் : **சோழர் காலத்தில் தழைத்தோங்கிய கல்வி நிலையங்கள்:**
இராஜராஜன் சதுர்வேதி மங்கலம் புகழ்பெற்ற வேதக் கல்லூரியின் இருப்பிடம் (எண்ணாயிரம் – முந்தைய தென்னாற்காடு மாவட்டம்).
திருபுவனையில் செழித்தோங்கிய வேதக்கல்லூரி (பாண்டிச்சேரி).
திருவிடைக்காளை கல்வெட்டு குறிப்பிடும் நூலகம்.
திருவாடுதுறைக் கல்வெட்டு குறிப்பிடும் (வீரராஜேந்திரன்) மருத்துவப் பள்ளி.

5) SSA மற்றும் RMSA விரிவாக்கம் தருக.

பதில் : **SSA மற்றும் RMSA விரிவாக்கம் :**
SSA – அனைவருக்கும் கல்வி இயக்கம்.
RMSA -அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்.

6) கல்வி பெறும் உரிமைச் சட்டம் (RTE) பற்றி நீவிர் அறிவதென்ன?

பதில் : **கல்வி பெறும் உரிமைச் சட்டம் (RTE) :**
கல்வி உரிமைச் சட்டமானது (RTE) 6 முதல் 14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழி செய்கிறது.

அனைவருக்கும் கல்வி இயக்கம் குழந்தைகளின் உரிமையான இலவச மற்றும் கட்டாய கல்வி (RTE – 2009) சட்ட விதிகளை அமல்படுத்துவதற்கான முதன்மை அமைப்பாக தற்போது செயல்படுகிறது.

7) பண்டைய கால இந்தியாவின் கல்வி முறையில் ஆசிரியரின் பங்கு என்ன?

**பதில் :** (i) மாணவர்களைத் தேர்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டங்களை வடிவமைப்பது வரை அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.
(ii) மாணவர்களின் திறனில் ஆசிரியர் திருப்தி அடையும் போது மட்டுமே அவர்களின் கல்வி நிறைவடைந்ததாக கருதப்பட்டது.
(iii) அவரது விருப்பத்திற்கேற்ப பல மாணவர்களை சேர்த்துக் கொள்வதுடன், மாணவர்கள் எதை கற்க ஆர்வமாக இருந்தனரோ அதையே கற்றுக் கொடுத்தார்.
(iv) விவாதங்கள் மற்றும் கலந்தாலோசித்தல் ஆகியன கற்பித்தலின் அடிப்படையான வழிமுறைகள் ஆகும்.
(v) கல்வியில் மேம்பட்ட நிலையிலிருந்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கு உதவினர்.

8) வார்தா கல்வித் திட்டம் என்றால் என்ன?

**பதில் :** (i)1937 ஆம் ஆண்டு பிரபலமான அடிப்படைக் கல்வித்திட்டமான வார்தா கல்வித்திட்டத்தை காந்தியடிகள் உருவாக்கினார்.
(ii) காந்தியடிகளின் அடிப்படைக் கல்வித்திட்டத்தின் அச்சாணியாக அகிம்சை கொள்கை இருந்தது.
(iii) அக்கல்வித் திட்டத்தின் மூலம் அகிம்சைக் கொள்கையை எதிர்கால குடிமக்களிடையே மேம்படுத்த அவர் விரும்பினார்.
(iv) அதன் மூலம் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்குவது அவசியமென கருதினார்.
(v) காந்தியடிகள் இத்திட்டத்தின் மூலம் சுரண்டலையும், சமூக மையப்படுத்துதலையும் நீக்கிவிட்டு வன்முறையற்ற சமூகநிலையை உருவாக்க விரும்பினார்.

9) 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் பற்றி விவரி.

**பதில் :** (i) 1813 இல் கிழக்கிந்திய நிறுவனம் இந்தியர்களின் கல்லிக்கான பொறுப்பை உறுதிப்படுத்த நிர்பந்திக்கப்பட்டது.
(ii) 1813 ஆம் ஆண்டின் பட்டயச் சட்டம், இந்தியாவில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தது.

10) புறநானூறு, கல்வியின் முக்கியத்துவம் குறித்துக் கூறுவதை எழுதவும்.

**பதில் :** 1. சங்க காலத்தைச் சேர்ந்த ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் தான் எழுதிய புறநானூற்றுப் பாடலில் (183) கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.
2. ஏழ்மை நிலையில் இருப்பவரும் ஆசிரியர்களிடம் சென்று கற்க வேண்டும். கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பரிசில்கள் வழங்கவேண்டும்.
3. தாயானவள், தான் பெற்றெடுத்தக் குழந்தைகளில் கற்றறிந்த குழந்தையையேப் பெரிதும் ஆதரிப்பாள். ஆள்பவர்களும் கற்றோரின் சொற்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பின்பற்றுவர்.
4. மேல்தட்டு மக்கள், கற்றுச் சிறந்தோர் கீழ்த்தட்டு மக்களாயினும் அவர் சொல்லுக்குத் தலை வணங்குவர் எனவும் கல்வியின் பெருமையைப் பெரிதும் போற்றியுள்ளார்.

11) நாளந்தா பல்கலைக்கழகம் பற்றி உங்களுக்கு தெரிவது யாது?

**பதில் :** 1. பீகாரில் சிறந்த பௌத்த கல்வி மையமாகத் திகழ்ந்த நாளந்தா பல்கலைக்கழகம், கல்வி பயில்வதற்கென சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பல பகுதிகளிலிருந்துவரும் மாணவர்களை ஈர்த்தது.
2. இங்கு பயின்ற மாணவர்கள் புத்தரின் கோட்பாடுகளைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.
3. கி.பி. (பொ.ஆ) ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங். நாளந்தாவிற்கு வருகை தந்தபோது, அங்கு மாணவர்கள் வேதங்களோடு நுண்கலைகள், மருத்துவம், கணிதம், வானியல், அரசியல் மற்றும் போர்க்கலை ஆகியவற்றில் பயிற்சியும் பெற்றனர்.

12) காந்தியடிகளின் வார்தா கல்வித் திட்டம் என்றால் என்ன?

**பதில் :** 1. காந்தியடிகள் வார்தா கல்வித்திட்டத்தைக் கொண்டு வந்தார். வார்தா கல்வித்திட்டம் அனைவருக்கும் அடிப்படையான தொடக்கக் கல்வியையும் கைத்தொழில் சிலவற்றைக் கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.
2. மாணவர்கள் தாங்களே உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தால் அவர்களுக்கான இலவச, கட்டாயக் கல்வி சாத்தியமாகும் என்று நம்பப்பட்டது.

13) சமணர்கள் மதபோதனைக்கான மையங்களை எங்கு நிறுவினார்?

**பதில் :** தென்னிந்தியாவில் மதுரைக்கு அருகிலும் காஞ்சிபுரத்திலும், கர்நாடகாவில் சரவணபெலகொலா என்னும் இடத்திலும் மதபோதனைக்கான மையங்களை சமணர்கள் நிறுவினர்.

14) மூன்று ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் நிறுவப்பட்ட மையங்கள் யாவை?

**பதில் :** ஐந்து ஐஐடிகள், 17 தேசிய ஆய்வகங்கள், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், அணு ஆராய்ச்சி மையம் ஆகியவை நிறுவப்பட்டன.

15) மடங்கள் - குறிப்பு வரைக.

**பதில் :** சைவ மற்றும் வைணவ மடங்கள் அரசர்களிடமிருந்து நன்கொடைகள் பெற்றுச் செயல்பட்டன. இவை சைவ சமயம், வைணவ சமயம், தற்காப்புக் கலைகள், இசை மற்றும் ஓவியம் போன்றவற்றைக் கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இன்றளவும் செயல்படுகின்ற இத்தகைய மடங்களுள் ஒன்றான பதினான்காம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட திருவாவடுதுறை சைவ மடத்தில்தான் தமிழறிஞர் உ.வே.சாமிநாதர் கல்வி பயின்றார்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

16) பண்டையகால இந்தியாவின் கல்வி பற்றி அறிய உதவும் ஆதாரங்கள் யாவை?

**பதில் :** பண்டையகால இந்தியக்கல்வி பற்றி அறிய உதவும் ஆதாரங்கள்.
நமது பண்டைய கல்வி முறை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உருவானது.
பாணினி, ஆர்யபட்டா, காத்யாயனா, பதாஞ்சலி ஆகியோரின் எழுத்துக்களும் சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் மருத்துவ குறிப்புகளும் கற்றலுக்கான ஆதாரங்களாக இருந்தன.
வரலாறு, தர்க்கம், பொருள் விளக்கம், கட்டிடக்கலை, அரசியல், விவசாயம், வர்த்தகம், வணிகம், கால்நடை வளர்ப்பு, வில்வித்தை போன்ற பல்வேறு துறைகள் கற்பிக்கப்பட்டன.
ஒரு முக்கியமான பாடத்திட்டமாக உடற்கல்வியும் இருந்தது. மாணவர்கள் குழு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயல்களில் பங்கேற்றனர்.
குருவும் அவரது மாணவர்களும் கற்றலின் அனைத்து அம்சங்களிலும் வல்லுநராவதற்கு இணைந்து பணியாற்றினர்.
மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்வதற்கு இலக்கிய விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கற்றலில் மேம்பட்ட நிலையில் உள்ள மாணவர்கள் இளைய மாணவர்களுக்கு வழிகாட்டினர்.

17) ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கல்வி பற்றி ஒரு பத்தி எழுதுக.

**பதில் :** **ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கல்வி :**
ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் கல்வியை நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம்.
**ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம் முதல் 1813 வரையிலான காலம் :**
ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி கல்வியில் அலட்சியம் மற்றும் குறுக்கீடு இன்மை என்ற கொள்கையைப் பின்பற்றியது.
கம்பெனியின் 1813 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட பட்டயச் சட்டம் இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை மிகக் குறைந்த அளவில் ஏற்கும்படி கட்டாயப்படுத்தியது.
சமயப்பரப்புக் குழு அல்லாதவர்களான இராஜா ராம்மோகன்ராய் (வங்காளம்), பச்சையப்பர் (மதராஸ்), பிரேசர் (டெல்லி) போன்றோர் கல்விக்காக தங்கள் பங்களிப்பைச் செய்தனர்.
1813 முதல் 1853 வரையிலான.
கல்விக் கொள்கை, பயிற்றுமொழி, கல்வியைப் பரப்பும் முறை ஆகியன கருத்து வேறுபாடுகள் கொண்ட பிரச்சனைகள்.
கீழ்த்திசை வாதிகள் கீழ்த்திசை மொழிகளைப் பாதுகாக்கவும், சமஸ்கிருதம் மற்றும் பாரசீக மொழிகளை பயிற்று மொழியாக்கவும் விரும்பினர். ஆங்கிலச் சார்பு கோட்பாட்டு வாதிகள் கீழ்த்திசை வாதிகள் கொள்கைகளை எதிர்த்து ஆங்கில மொழி மூலம் மேற்கத்திய அறிவை பரப்புவதை ஆதரித்தனர். மூன்றாவது பிரிவினர் பயிற்று மொழியாக இந்திய மொழிகளை பயன்படுத்துவதில் நம்பிக்கை கொண்டவர்கள்.
1835 ன் மெக்காலே – வின் குறிப்பினால் இந்த கருத்து வேறுபாடுகள் ஓய்ந்தன.
**1854 முதல் 1920 வரையிலான காலம் :**
ஆங்கிலேயரின் செல்வாக்கு மிக்க கல்வியின், அகில இந்தியக் கல்விக் கொள்கையின் காலம் என இக்காலம் அழைக்கப்படுகிறது.
இது 1854 ம் ஆண்டு சர் சார்லஸ் வுட் கல்வி அறிக்கையுடன் தொடங்குகிறது. (ஆங்கிலக் கல்வியின் மகா சாசனம்)
**1921 முதல் 1947 வரையிலான காலம் :**
இக்காலக்கட்டம் மாகாணங்களின் சுயாட்சிக் காலமாகும்.
நாடு முழுவதும் கல்வியின் முன்னேற்றத்திற்கான புதிய சகாப்தத்தை 1935ம் ஆண்டு சட்டம் உருவாக்கியது. இது மாகாணங்களின் அமைச்சர்களின் நிலையை வலுப்படுத்தியது.
இரண்டாம் உலகப்போருக்குப் பின் சார்ஜண்ட் அறிக்கை (1944) தயாரிக்கப்பட்டது. இது சமகால கல்வியின் சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

18) தேசியக் கல்விக் கொள்கை பற்றி விவரி?

**பதில் :** விடுதலைக்குப் பின், 1968ம் ஆண்டின் முதல் தேசியக் கல்விக் கொள்கையானது இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இது தேச முன்னேற்றத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டது.
இந்திய அரசு 1986ம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையினை அறிமுகப்படுத்தியது. இதன் நோக்கம் ஒரு நிலையான சமுதாயத்தை மேம்பாட்டுடன் கூடிய துடிப்பான சமுதாயமாக மாற்றுவதாகும்.
இப்புதிய கல்விக் கொள்கை நாட்டில் விளிம்பு நிலை மக்களுக்கான சம வாய்ப்புகள் மற்றும் உதவித் தொகைகள், வயது வந்தோர் கல்வி, திறந்த நிலைப் பல்கலைக் கழகங்கள் மூலம் இந்தியாவில் ஏற்றத் தாழ்வுகளை நீக்குதலை வலியுறுத்தியது.
தொடக்கக் கல்வியில் குழந்தைகளை மையமாகக் கொண்ட அணுகு முறைக்கு அழைப்பு விடுத்ததுடன், கரும்பலகைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது.
1992ம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையானது மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. இடைநிலைக் கல்வி நிலையில் மதிப்பீட்டு முறைகளை ஒழுங்குப்படுத்துதல், தேசியக் கலைத்திட்டத்தை வடிவமைத்தல், பணியிடைக் கல்வி, வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்தியது.

19) சோழர் காலத்தில் கல்வியின் நிலையைப் பற்றி விரிவாக எழுதுக.

**பதில் :** சோழர்களின் காலத்தில் தமிழ் வழிக் கல்வியானது கோயில் மற்றும் சமயத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது. மக்களுக்கு இலவச கல்வி அளிக்கப்பட்டது.
கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டிருந்தது.
சோழர்கால கல்வெட்டுக்களிலிருந்து ஆசிரியர்களின் தகுதிகள், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் பள்ளிகளுக்கு அளித்த நிலங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது..
இராஜராஜன் சதுர்வேதி மங்கலம் புகழ்பெற்ற வேதக் கல்லூரியின் இருப்பிடம் (எண்ணாயிரம் முந்தைய தென்னாற்காடு மாவட்டம்) – திருபுவனையில் செழித்தோங்கிய வேதக்கல்லூரி (பாண்டிச்சேரி) – திருவிடைக்காளை கல்வெட்டு குறிப்பிடும் நூலகம். – திருவாடுதுறைக் கல்வெட்டு குறிப்பிடும் (வீரராஜேந்திரன்) மருத்துவப் பள்ளி.

20) பொது தொடக்க கல்வியில் முதன்மைத் திட்டமாக அனைவருக்கும் கல்வி இயக்கம் எவ்வாறு இலக்கை அடைந்துள்ளது?

**பதில் :** பொது தொடக்கக் கல்வியில் முதன்மைத் திட்டமான அனைவருக்கும் கல்வி இயக்கம் அடைந்தள்ள இலக்கு : அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வியைப் பெறுவதற்காக 2000 – 01 ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும்.
குழந்தைகளின் உரிமையான இலவச மற்றும் கட்டாய கல்வி (RTE – 2009) சட்ட விதிகளை அமுல்படுத்துவதற்கான முதன்மை அமைப்பாக இது தற்போது செயல்பட்டு வருகிறது.
கல்வி உரிமைச் சட்டமானது (RTE) 6 முதல் 14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழி செய்கிறது.
அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) பள்ளிகள் தொடர்பான பல்வேறு வகையான புதுமைகளையும், செயல்பாடுகளையும் துவக்கி வைத்துள்ளது.
மதிய உணவு வழங்குதல், மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், பள்ளி மேலாண்மைக் குழு அமைத்தல், வகுப்பறைக்கான கற்றல் – கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல் ஆகியன சில முக்கிய செயல்பாடுகளாகும்.